# மெட்ரோ ரயில் பணிகள் விரைந்து முடிக்க உத்தரவு

**சென்னை, ஜூலை 15–**

சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிகளை, விரைவாக முடிக்கும்படி, முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தி உள்ளார்.

சிறப்பு முயற்சிகள் துறையின் கீழ் இயங்கும், மெட்ரோ ரயில் திட்டங்கள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து, முதல்வர் ஸ்டாலின் நேற்று ஆய்வு செய்தார். சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில், முதல் கட்டம் மற்றும் அதன் நீட்டிப்பு; இரண்டாம் கட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு செய்தார்.



பணிகளை விரைவாக முடித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். சென்னை மெட்ரோ ரயில் திட்டம், முதல் கட்டத்தின் நீட்டிப்பில் அறிவிக்கப்பட்ட, மீனம்பாக்கம் முதல் கிளாம்பாக்கம் வரையிலான வழித்தடம்; தாம்பரம் முதல் வேளச்சேரி வரையிலான வழித்தடப் பணிகளை, விரைவாக செயல்படுத்த வேண்டும் என, முதல்வர் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில், தலைமைச் செயலர் இறையன்பு, நிதித்துறை செயலர் கிருஷ்ணன், சிறப்பு முயற்சிகள் துறை செயலர் விபுநய்யார், சென்னை மெட்ரோ ரயில் மேலாண்மை இயக்குனர் பிரதீப்யாதவ் மற்றும் அதிகாரிகள், கலந்து கொண்டனர்.